1970 ஆகஸ்ட் 26]

Municipal Superior Employees Association, Tiruvannamalai.

* 54 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government has received a copy of resolution dated 12–9–1969 from the *நகரமன்ற உயர்தர ஊழியர் சங்கம்* Tiruvannamalai passed at a conference held on 8th September 1969 at Tiruvanuamalai; and

(*b*) if so. the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், நகராட்சி மன்றத்தில் போதுமான நிதி வசதி இருந்தால்தான் கொடுக்கலாம் என்ற அளவுக்கு ஒரு உத்தரவு போய் இருப்பதாக தெரிகிறது. நிதி நிலைமை இல்லை என்று சொல்கிற நேரத்தில் சிலருக்குக் கிடைக்கும் சிலருக்குக் கிடைக்காது என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இருந்தாலும் இல்லை என்று சொன்னாலும் கொடுக்கப்படக் கூடிய அளவுக்கு உத்தரவு அனுப்பப்படுமா? அதே நேரத்தில் சுகாதாரத் தொழிலாளர்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்று பொது மக்களின் நலனைக் கருதி வேலை செய்யக்கூடிய அந்த சுகாதாரத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்படி உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: நிதி நிலைமை சரியாக இருந்தால் தரப்படவேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி நிதி நிலைமைத் தட்டுப்பாடு இருக்கிற நேரத்தில் சம்பந்தப் பட்ட நகராட்சி மன்றம் அரசாங்கத்திற்கு எழுதும் போது கடனாக அரசாங்கம் நிதி தருகிறது. சுகாதாரத் தொழிலாளர்கள் பிரச்சினைகளுக்கும் இதற்கும் தொடர்பில்லை.

கொத்தவால் சந்தை இடமாற்றம்

* 55 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள கொத்தவாசல்சாவடியைக் கோடம் பாக்கம்புதூர் Part II-ல் உள்ள அசோக் நகருக்கு மாற்ற அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Dr. H. V. HANDE: Sir, Kothwal Bazaar Market is now in a very bad shape and there is no proper hygiene and sanitation there on account of the heavy traffic on the busy roads surround-

---

[a] 93-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.